# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 92/2025**

***Deposition of Additional witness LW9 examined as PW2*** *Dt.21.01.2026*

| | |
|---|---|
| Name | கலியபெருமாள் (SI of Police) |
| Father's/Husband's Name | கணபதி |
| Village | பாலையூர் PS |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 21.01.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் பாலையூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் துறையில் பணிபுரிந்த வகையில் உதவி ஆய்வாளர் மணிமாறன் என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சி போலீசார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளித்து இருப்பதால் நீதிமன்றத்தின் நேரம் கருதி கூடுதல் சாட்சியாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.05.2024-ம் தேதி காலை 7.30 மணிக்கு பாலையூர் உதவி ஆய்வாளர் மணிமாறன் என்பவர் பணியில் இருந்த போது மயிலாடுதுறை பெரியார் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பூமிநாதன் மகள் நீத்துதளித்தாபரணி வயது 4-1/2 என்பதால் அவரது தயார் விஜயலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார். பின்னர் நிலையம் வந்து காவல் நிலைய குற்றஎண். 105/2024 இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன் கீழ்வழக்கினை பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரபாகரன், உஷா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானர்களையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் குற்ற சம்பவம் உண்மை என தெரிய வந்த நிலையில் எதிரியை தேடிய போது கடந்த 25.05.2024-ன் தேதி காலை 9.45 மணிக்கு நச்சினார்குடி பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரியை குற்ற காரணம் கூறி

21-1-26

கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இந்த வழக்கில் காயம் பட்ட நீத்துதளித்தாபரணிக்கு சிகிச்சை அளித்து திருவாரூர் மருத்துவர் பிரபு என்பவரை விசாரித்து அவர் கொடுத்த காயச்சான்றினையும் மயிலாடுதுறை மருத்துவமனையில் இருந்த பெற்ற விபத்து பதிவேட்டையும் பெற்றுள்ளார். **அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** குழந்தைக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) சட்டப்பிரிவுகளில் இருந்து இதச பிரிவுகள் 294(b), 326, 506(2) சட்டப்பிரிவுகளாக மாற்றம் செய்துள்ளார். **சட்டபிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து கடந்த 30.06.2024–ம் தேதி இதச பிரிவுகள் 294(b), 326, 506(2) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குழந்தைக்கு ஏற்பட்ட காயம் என்பது அவர் விளையாடும் போது கீழே விழுந்து ஏற்பட்ட காயம் என்றாலும் எதிரியால் ஏற்பட்ட காயம் இல்லை என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பொய்யான புகாருக்கு எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சியை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து போலியாக தயார் செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

21/12/24

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை